774/2022

<u>பதிவஞ்சல் ஒப்புகையுடன்</u>

# சென்னை–6, குடும்ப நல இயக்குநர் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள்

## முன்னிலை: மரு.வி.பி.ஹரிசுந்தரி,எம்பிபிஎஸ்,டிசிஎச்.,

நாள்:16.09.2022

ந.க.எண்.9650/குந/நி1/2021

அரசு மருத்துவமனை
நாள் : ........
கோலார்பட்டி

பொருள்: நிர்வாகம் – தமிழ்நாடு அமைச்சுப்பணிகள் – கருணை அடிப்படையில் பணிநியமனம்–பணியிடை மரணமடைந்த திரு.(லேட்) லியாகத் அலி என்பவரது மகன் திரு.லி.நிசார் முகமது – இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் – பணிவரன்முறை ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, (Q1) நாள்.23.01.2020.
2. இவ்வியக்கக பணிநியமன ஆணை எண்.3996/குந/நி1/2007, நாள் 03.02.2020.
3. சென்னை-06, மருந்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககத்தின் கடித ந..க.எண்.49769/நி2/2/2021, நாள்:21.09.2021.

*******

**ஆணை:**

பார்வையில் கண்டுள்ள அரசாணை மற்றும் அதன் தொடர்புடைய ஆணையின்படி தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகள் பொது விதிகள் 10 (ஏ) (1) ன் கீழ் திரு.லி.நிசார் முகமது (திரு.(லேட்) லியாகத் அலி ) வட்டார விரிவாக்க கல்வியாளர், அரசு ஆரம்ப சுகாதார நிலையம், பெரியபோது, கோயம்புத்தூர் மாவட்டம்) என்பவர் கருணை அடிப்படையின் கீழ் தமிழ் நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளராக அரசுப் பணியில் நியமனம் செய்யப் பட்டுள்ளார்.

கோயம்புத்தூர் மாவட்டம், பெரிய போது அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் வட்டார விரிவாக்கக் கல்வியாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்த திரு.லியாகத் அலி என்பவர் 14.07.2004 அன்று பணியிடை மரணமடைந்துள்ளார் அவர் அப்பணியில் தகுதிகாண்பருவம் முடிக்கப் பெற்றவர். அவரின் பிறந்த தேதி 21.09.1951 என்பதால் அவருடைய உத்தேச ஓய்வு பெறும் நாள்:30.09.2009 ஆகும். எனவே பணியிடை மரணமடைந்த அரசு ஊழியரின் மகன் திரு.லி.நிசார் முகமது என்பவர் தனக்கு கருணை அடிப்படையில் தமிழ் நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளர் பணி வேண்டி உரிய காலகெடுவுக்குள் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்திருந்தார். அவரின் பிறந்த தேதி 05.01.1987 அவர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளதாலும், கருணை அடிப்படையில் பணிநியமனம் பெறுவதற்கான ஏனைய தகுதிகளை பூர்த்தி செய்திருந்ததாலும் திரு.லி.நிசார் முகமது என்பவர் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் தற்காலிகமாக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டு

சென்னை-06 குடும்நல இயக்ககத்தில் பணியமர்த்தப்பட்டார். தனியர் 12.02.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறார். தற்போது 03.09.2020 முற்பகல் முதல் கோலார்பட்டி அரசு மருத்துவமனையில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறார்.

தனியருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் அவர் பணியில் இணைந்த நாளான 12.02.2020 முற்பகல் முதல் பணிவரன் முறை செய்து ஆணை வழங்குமாறு கோலார்பட்டி அரசு மருத்துவமனை முதன்மை மருத்துவ அலுவலர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார். தனியர் மீது நாளதுவரை எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் நிலுவையில் இல்லை என சான்றளித்துள்ளார்.

எனவே, பார்வை (1)-ல் காணும் அரசாணையின்படி கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.லி.நிசார் முகமது என்பவரின் தற்காலிக பணியினை அவர் இளநிலை உதவியாளராக பணியில் இணைந்த நாளான 12.02.2020 முற்பகல் முதல் பணி வரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது. தனியர் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து இரண்டு வருட கால தகுதிகாண் பருவத்தினை தொடர்ச்சியான மூன்று ஆண்டு கால அவகாசத்திற்குள் முடிக்க வேண்டும். அதன் பின்னரே தனியருக்கு ஆண்டு ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவை இருப்பின் அதைப் பெற அரசு விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

மரு.வி.பி.ஹரி சுந்தரி,
குடும்பநல இயக்குநர்.

பெறுநர்
திரு.லி.நிசார் முகமது,
இளநிலை உதவியாளர்,
அரசு மருத்துவமனை, கோலார்பட்டி
கோயம்புத்தூர் மாவட்டம்.

நகல்
1. இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், சென்னை -06.
2. இணை இயக்குநர் நலப்பணிகள், கோயம்புத்தூர்.
3. முதன்மை மருத்துவ அலுவலர், அரசு மருத்துவமனை, கோலார்பட்டி, கோயம்புத்தூர் மாவட்டம்.
4. தனியரின் பணிப்பதிவேடு.
5. இருப்புக்கோப்பு
6. உபரி.

உண்மை நகல்/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது

19/9/20

கண்காணிப்பாளர்.

16/9/22